# பொதுக்காலம் 17ஆம் வாரம் - ஞாயிறு

# மூன்றாம் ஆண்டு

## திருப்பலி முன்னுரை

இறை இயேசுவில் பிரியமானவர்களே! செபம் என்பது நமக்கும் இறைவனுக்கும் இடையேயான ஓர் உன்னதமான உறவு. இந்த உறவுப் பரிமாற்றத்தில் நம் கடவுளின் அன்பையும் அளவற்ற இரக்கத்தையும் மனக்கண்முன் கொண்டு வருகிறது இன்றைய ஞாயிறு வழிபாடு.

கேட்பது என்பது நம் செபவாழ்வைப் பற்றியும், தேடுதல் என்பது கடவுளின் திருவுளத்தைத் தேடுதல் என்பதையும் நமக்கு இயேசு சுட்டிக்காட்டுகிறார்.

இன்று நம் வாழ்வில் நம் தேடலும், வேண்டுதலும் எதைச் சார்ந்துள்ளது என்பதை நாம் சிந்திக்க வேண்டும்.

வானகத் தந்தையாகிய இறைவன் நம்மீது இரக்கமும், அன்பும் கொண்டு தந்தைக்குரிய பாசத்தோடு நம்மைக் காத்து வருகிறார். எனவே செபத்தை நாம் கேட்பதை எல்லாம் பெற்றுக் கொள்ளக்கூடிய ஒரு இடமாக மட்டும் பார்க்கக் கூடாது. நமது செபங்களில் நமது விருப்பங்களை முன்னிறுத்தாமல் இறைவனின் திட்டத்தை ஏற்று செயல்படும் மனப்பக்குவம் பெற்றிட வேண்டும். அதற்கான இறையருளை இத்திருப்பலியில் வேண்டுவோம்.

## முதல் வாசக முன்னுரை (தொடக்க நூல் 18: 20-32)

ஆபிரகாம் தீயவர்களோடு நீதிமான்களும் அழிக்கப்பட்டுவிடக்கூடாது என்பதற்காக ஆண்டவரோடு பேசி நீதிமான்களைக் காப்பாற்ற முயலுகின்றார். தீச்செயல் பெருகினால், ஆண்டவரின் கோபத்திற்கு ஆளாவோம் என்று எச்சரிக்கை தரும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## இரண்டாம் வாசக முன்னுரை (கொலோசையர் 2: 12-14)

நமது குற்றங்களை இயேசு தனது சிலுவையின் வழியாக அறவே ஒழித்துவிட்டார் என்றும், அவர்மேல் நம்பிக்கை கொண்டு புதுவாழ்வுக்கு உயிர்த்தெழுங்கள் என்று அழைப்பு விடுக்கும் இவ்வாசகத்திற்குச் செவிமடுப்போம்.

## மன்றாட்டுக்கள்

***பதில்: எல்லாம் வல்ல இறைவா, எங்கள் மன்றாட்டைக் கேட்டருளும்.***

1. நீதியின் தேவனே எம் இறைவா!

எம் திருச்சபையின் தலைவர்களை அனைவரும் இறைவனின் அளவுகடந்த இரக்கத்தை வெளிப்படுத்தும் கருவிகளாக வாழ்ந்திட உமதருளைப் பொழிய வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

2. கனிவும் பெறுமையும் உள்ள இறைவா!

கிறித்தவ வாழ்வின் அடிப்படை குடும்ப செபமே என்பதை உணர்ந்து நாளும் செபித்திட தேவையான அருளைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

3. எம்மை என்றும் மன்னிப்பவரே எம் இறைவா!

உம் திருமகனின் சிலுவைச்சாவின் வழியாக நீர் எங்களுக்கு உமது மன்னிப்பைத் தந்தீர். அதே மன்னிப்பை நாங்களும் பிறருக்கு அளித்தருள நல்மனதைத் தர வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

4. என்றும் வாழ்பவரே எம் இறைவா!

இவ்வுலகில் வாழும் ஏழைகள், அநாதைகள், கைவிடப்பட்டோருக்கு உமது அளவில்லா இரக்கத்தைக் காட்டியருளும். உமது இரக்கத்தின் பயனாக அவர்கள் தங்கள் வாழ்வில் வளம் பெற்றிட வேண்டுமென்று இறைவா உம்மை மன்றாடுகின்றோம்.

**நன்றி : அருட்சகோதரி ஷீலா FST, மேலமெஞ்ஞானபுரம்.**

**“கடவுள் அன்பாய் இருக்கிறார்!” 1 யோவா 04: 16**

மறைத்திரு. அமிர்தராச சுந்தர் ஜா.

info.arulvakku@gmail.com; + 91 843 802 1938; www.arulvakku.com